
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

Translated from BS 886
Published on Oct 24, 2015

பொருளடக்கம்

அழுகை ஆசீர்வாதங்களை கொண்டுவருகிறது...... 2

வார்த்தைகள் மீதான உண்மையான கருத்துக்கள்.................... 9

எங்கள் பத்திரிகை சம்பந்தமான கொள்கைகள் .................. 11

BS Tamil Version - 31

2015



# அழுகை ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது

***Weeping Brings Blessings***

*“கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.”* (சங். 30 : 4, 5).

BS#886

சாத்தானுடைய ஆளுகையின் கீழ் தேவனுக்கு விரோதமாக மனப்பூர்வமாக பாவஞ்செய்த தகப்பனாகிய ஆதாமின் மூலம் பாவமும் மரணமும் நம் மீது கொண்டு வரப்பட்டது. (1 தீமோ. 2 : 14). “**ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.**” (ரோம. 5 : 12. 18, 19; 1 கொரி. 15 : 22). பொதுவாக மனுக்குலமனைத்தும் மிக அதிகமான அளவுக்கு, கடுமையாக துன்பம் அனுபவித்துக் கொண்டு, இந்நாள் வரைக்கும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்பட்டு புலம்பி வருகிறது; அறியாமையில் அவர்கள் அப்படி செய்து வந்தாலும், இப்போதும் அவர்கள், “**தேவ புத்திரர் வெளிப்படுவதற்கு (சிருஷ்டியானது) மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறார்கள்,**” அப்போது அவர்கள் “**அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.**” (ரோம. 8 : 19-22).

பிரதிஷ்டை செய்த தேவனுடைய ஜனங்கள், அவருடைய விசேஷ தேர்ந்தெடுப்புக்குட்பட்டவர்களாக பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதற்காக ஆயிர வருட யுகத்திற்கு முற்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக ஆயத்தமாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். (ஆதி. 12 : 1-3; 22 : 15-18; கலா. 3 : 7-9, 16, 29). அவர்கள் அநேக இடுக்கண்களை அனுபவிக்கின்றனர், ஏனெனில், “**நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.**” (அப். 14 : 22; மத். 5 : 10-12; 10 : 38; 2 கொரி. 4 : 15-18; எபி. 11; 1 பேது. 4 : 12-19). தேவன் சாத்தானை, “**இப்பிரபஞ்சத்தின் தேவனாக**” “**பொய்க்குப் பிதா**”வாக, அவிசுவாசிகளை வஞ்சிக்கவும், அவர்களுடைய மனதைக் குருடாக்கவும், (2 கொரி. 4 : 4; யோவா. 8 : 44 “**அவன் பூமியைத் தத்தளிக்கப் பண்ணவும்,**” “**இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்**”படி செய்யவும் (ஏசா. 14 : 16; 60 : 2) அனுமதித்திருக்கிறார். அவன் அநேக கிறிஸ்தவர்களையும்கூட ஏறக்குறைய தன்னுடைய தந்திரமான தப்பறைகளால் வஞ்சித்து, தீமையான பழக்கவழக்கங்களில் சிக்க வைத்திருக்கிறான்.

**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைளை எழுது என்றார். வெளி. 21 : 4, 5.**

ஆனால் தேவன் தம்மிடம் விசுவாசத்துடனிருப்பவர்களை, “**வேடனுடைய** (சாத்தானுடைய) **கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும்**” (விஷத்தன்மையுள்ள ஆவிக்குரிய நோய்க்கும்) தப்புவிக்கிறார். (சங். 91 : 3). சாத்தான் முழுமையாக கட்டப்பட்டு, அவன் ஜாதிகளை இனிமேல் வஞ்சிக்க முடியாதவனான பிறகு, கிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் ஆளுகை செய்கிற ஆயிர வருட அரசாட்சியின் போது தேவன் தம்மைப் பற்றிய அறிவை, “**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல்**” பூமியெங்கும் நிறைந்திருக்கச் செய்வார். (ஏசா. 11 : 9). “**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின**” ஆயிர வருட அரசாட்சியின் போது அவர் “**சகலத்தையும் புதிதாக்குவார்.**” (வெளி. 20 : 1, 4; 21 : 4, 5).

இரவிலே எங்கே அழுகை தங்கியிருக்கிறதோ (இருள், பாவம், துயரம் என்னும் இரவு; மரித்துக்

**COURTESY BY :**

**The Bible Standard** -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*




“இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.”

கொண்டிருக்கும், பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருக்கிற இரவு – தானி. 12 : 2) அங்கே (ஆயிர வருட) காலையில் களிப்புண்டாகும், (மரித்தோர் உயிர்த்தெழுதலில் விழித்துக் கொள்ளுதலின் அனுபவத்தைப் பெற்று பிரேதக் குழியிலிருந்து எழுந்து வருவார்கள். – யோவா. 5 : 28, 29) என்கிற மகிமையான செய்தியுடன் நம்முடைய பாடமானது நமக்கு சந்தோஷத்தைக் கொண்டு வருகிறது.

தேவனுடைய கோபம் ஒரு நொடிப்பொழுது (நித்தியத்துடன் ஒப்பிடும்போது) என்பதாக நமக்கு சொல்லப்படுகிறது, ஏனெனில் “**நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்**,” அதெப்படியெனில் ஆயிர வருட அரசாட்சியில் தேவன், “**எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும், துதியையும் முளைக்கப் பண்ணுவார்,**” அத்துடன் அவர் “**நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களையும், புதிய பூமியையும்**” சிருஷ்டிப்பார். “**இனி ஒரு சாபமுமிராது**” (சங். 107 : 42; ஏசா. 61 : 11; 65 : 17; 2 பேது. 3 : 13; வெளி. 22 : 3). அவருடைய பிரதிஷ்டை செய்த பரிசுத்தவான்களே (அவருக்கு பூரணமாக அர்ப்பணித்த அவருடைய பரிசுத்தவான்கள்), “**அவருடைய தயவோ நீடிய வாழ்வு**” – நித்திய ஜீவன்! என்பதை அறிந்தவர்களாய் அவருடைய துதிகளைப் பாடி “**அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடுவார்களாக.**” வேத வாக்கியங்கள் மிகவும் தெளிவாயிருக்கின்றன, “**ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.**” (யோபு 14 : 1) “**அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது, அவன் வேலைகள் வருத்தமுள்ளது.**” (பிர. 2 : 23). சாபத்தின் சூழ்நிலைகளின்கீழ் எல்லோரும் பாடநுபவித்து அழுகைக்கான காரணங்களை அதிகமாகப் பெற்றிருக்கின்றனர்.

## பாடுபடுதலும், அழுகையும் தனிப்பட்ட பாவத்தின் விளைவினாலா ஏற்படுகின்றன?

(1) பாடநுபவித்தும், அதன் முடிவாக ஏற்படுகிற துயரமும், அழுகையும் எப்போதுமே அவரவருடைய தனிப்பட்ட பாவத்தின் விளைவாக வருகின்றன என்ற தவறான கருத்தை அநேகர் கொண்டிருக்கின்றனர். பிறவிக்குருடனான ஒரு மனுஷனைக் குறித்து இயேசுவின் சீஷர்கள் தங்கள் எஜமானரிடம், “**இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமா, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா? என்று கேட்டனர்.**” இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, “**அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்**” என்றார். (யோவா. 9 : 1–3).

சுகவீனங்களை நாம் கருத்தில் கொள்வோம், அவை பாவத்திற்கான தண்டனைகளாகுமா? அவை மனுக்குலத்தாரின் பொதுவான விழுந்து போன நிலையின் விளைவாக அல்லது தனிப்பட்டவருடைய அஜாக்கிரதையினாலோ அல்லது வாழ்க்கையில் சாதாரணமாக நேரிடும் விபத்துக்களினாலோ அல்லது குணாதிசய பரீட்சைகள் அல்லது இந்த விஷயத்தில் உள்ளது போல எதிர்கால ஆசீர்வாதங்களுக்கான வாய்க்கால்களாகவோ இவை நேரிடலாம். சில கலிலேயர்களைக் குறித்தும், சீலோவாம் கோபுரம் விழுந்து மரித்த பதினெட்டு பேர்களைப் பற்றியும், இயேசு சாட்சியாக சொல்லுகையில், அவர்களுக்கு நேர்ந்த துன்பம், அவர்கள் பொதுவான மற்ற ஜனங்கள் எல்லாரையும் விட பாவிகளாயிருந்த படியினால் அல்ல என்கிறார். “**அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்.**” (லூக். 13 : 1–5).

## யோபுவை எல்லாரும் நேசிக்கின்றனர்

மற்றெல்லாரைக் காட்டிலும் அதிக பாவியாக இருக்கிற காரணத்தால் ஒருவன் துன்பம் அனுபவிக்கிறதில்லை என்பதற்கு யோபு மிகச் சிறந்த உதாரணமாயிருக்கிறார். மாறாக அவர் அன்பில் பூரணப்பட்டவராகவும், நியாயத்தில் மிகச்சரியானவராகவும் இருந்தார், மேலும் அவர் எல்லா காரியங்களிலும் தேவனை முதலாவதாக நிறுத்தி, தீமையான எல்லாக் காரியங்களையும் வெறுத்து

**தேவன் உடனிராமல் நம்முடைய வாரம்** (week) **இப்படியாக இருக்கும்**

| | | |
|---|---|---|
| பாவ நாள் | - | **SINDAY** |
| புலம்பலின் நாள் | - | **MOURNDAY** |
| கண்ணீரின் நாள் | - | **TEARSDAY** |
| வீணான நாள் | - | **WASTEDAY** |
| சண்டையின் நாள் | - | **FIGHTDAY** |
| நொறுங்கும் நாள் | - | **SHATTERDAY** |

**தேவன் உடனிராத 7 நாட்கள் ஒருவனை** (weak) **பலவீனமாக்குகிறது.**

ஒதுக்குகிறவராக இருந்தார். (யோபு 1 : 1). அப்படி இருந்தும், தேவன் அவரை ஏறக்குறைய சமாளிக்க முடியாத உபத்திரவங்களில் துன்பப்பட அனுமதித்து, பின்பு அவருடைய சோதனைகள் அவைகளின் திட்டமிட்ட விளைவுகளை நிறைவேற்றிய பிற்பாடு அவருக்கு மிகுதியான அளவில் வெகுமதியளித்தார். யோபு தன்னுடைய துன்பம் மிகுந்த அனுபவங்கள் மூலமாக உண்மையுள்ளவரென்று நிரூபிக்கப்பட்டு பெலப்படுத்தப்பட்டார்.

யோபு தன்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து துன்பப்பட்டார், பின்பு அவர் நேசித்த அவருடைய பிள்ளைகளையும் அதன்பின்பு தன்னுடைய மனைவியின் அன்பு மற்றும் உத்தமத்தையும் இழந்து துன்பப்பட்டார். இறுதியாக அவர் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டார். பின்பு அவருடைய நண்பர்களில் மூன்றுபேர் அவரைக் காண வந்து தேற்றினார்கள், ஆனால் உண்மையான ஆறுதல் அளிப்பவர்களாக இருப்பதற்கு பதிலாக, அவர்கள் இந்த சீர்கேடுகளுக்கெல்லாம், அவனுடைய சொந்த பாவங்களே காரணமாக இருந்திருக்க வேண்டும் என்றும், அதனால் அவன் அனுபவிக்கிறவைகள் யாவும் அவனுடைய பங்கான அவிசுவாசத்தின் காரணமாக தேவனிடமிருந்து வருகிற தண்டனைகளாகவே நிச்சயம் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியதன் வாயிலாக அவனுடைய துயரங்களை மேலும் அதிகப்படுத்தினார்கள். இங்கே மீண்டுமாக, பிரத்தியேகமான துன்பம், துயரம் மற்றும் அழுகை போன்றவை, தனிப்பட்ட பாவத்தின் விளைவாக வருகிறது என்று அநேகர் தவறான எண்ணத்தை கொண்டிருக்கிறார்கள் என நாம் அறிகிறோம். இருந்தாலும், அப்படிப்பட்ட கடுமையான பரீட்சையின் கீழிருந்தபோதும், யோபு தேவனிடத்தில் தான் கொண்டிருந்த விசுவாசத்தை ஒருபோதும் இழக்கவில்லை. அவன் சொல்வதைக் கேளுங்கள்; "**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.**" (யோபு 1 : 21). "**அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.**" (யோபு 13 : 15). மெய்யாகவே யோபு அதிகமாக சிறுமைப்படுத்தப்பட்டார். ஆனாலும் அவை எல்லாவற்றின் மத்தியிலும் அவர் தன்னுடைய குணத்தின் மேன்மையையும், தேவனிடத்தில் கொண்டிருந்த தன்னுடைய விசுவாசத்தையும் காத்துக் கொண்டார். அவர் தேவனை அநியாயமாக குற்றஞ் சாட்டவில்லை, அத்துடன் தேவனும் தன்னுடைய உண்மையுள்ள ஊழியக்காரனைக் கைவிடவில்லை. முடிவில், யோபு இதற்கு முன்பு எப்போதும் இராத அளவுக்கு அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார். இந்த நாள் வரை தேவன் தம்மை நேசிப்பவர்களிடமும், தம்மிடத்தில் முழு நம்பிக்கை வைப்பவர்களிடமும் எவ்வளவு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்!

## எசேக்கியா ராஜா இன்னொரு உதாரணம்

துன்பமும், துயரமும் அனுபவித்தவர்களில் எசேக்கியா ராஜா இன்னொரு உதாரணமாயிருக்கிறார், அவர் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதால் அவர் தன்னுடைய வீட்டுக் காரியத்தை ஒழுங்கு படுத்திக் கொள்ளும்படி ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக யேகோவாவால் சொல்லப்பட்டது. (ஏசா. 38 : 1-3). அது அவருடைய தனிப்பட்ட பாவத்தின் காரணமாக அல்ல. அவன் மிகுந்த துக்கத்துடன் தேவனிடம் விண்ணப்பம் பண்ணினான். வச. 3, "**ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்.**" கர்த்தாவே என்னுடைய




ஜீவியத்தைப் பற்றி மூன்று காரியங்களை நினைத் தருளும் : (a) "**நான் உமக்கு முன்பாக உண்மையாக நடந்தேன்:**" (b) "**மன உத்தமமாய் நடந்தேன்:**" (c) "**உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்.**" தேவன் தமது நீதியுள்ள ஊழியக்காரனுடைய கண்ணீரைக் கண்டார், அவருடைய விண்ணப்பத்தைக் கேட்டார், அவரை அதிசயிக்கத்தக்க வகையில் ஆசீர்வதித்தார், அதினிமித்தம் எசேக்கியா ஒரு அழகான துதியின் புகழுரையை எழுதினான். (ஏசா. 38 : 4-22).

தேவனுடைய ஜனங்களுக்கு வந்த பாடுகளும், அழுகையும் பதிவு செய்யப்பட்ட மற்ற உதாரணங்கள் அநேகம் வேதாகமத்தில் இருக்கின்றன, ஆனால் அவை தனிப்பட்ட பாவத்தின் காரணமாக அல்ல. மார்த்தாள், மரியாள், யூதர்கள், இயேசுவும்கூட, லாசரு மரித்த வேளையில் அழுததைக் கவனியுங்கள். (யோவா. 11 : 32-36).

இயேசுவும், "**அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று** (மரணத்தை விட்டு வெளியே) (உயிர்த்தெழுதல் மூலமாக) **இரட்சிக்க வல்லமையுள்ளவரை** (தேவனை) **நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்.**" அவர் தமது பலி செலுத்தும் வேலையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க சிறு தவறு செய்துவிட்டாலும் அது தமது சொந்த அழிவிற்கே காரணமாகிவிடும் என்று பயந்தார் (எபி. 5 : 7). நிச்சயமாக, ஒருவருமே இயேசுவின் பாடுகளையும், பலத்த கண்ணீரையும் அவருடைய பங்கில் ஏதேனும் பாவத்தின் பொருட்டு தான் என்று எவருமே காரணம் சொல்ல மாட்டார்கள்! தனிப்பட்ட பாவமானது தனிப்பட்ட விதத்தில் பாடுகளையும் சில சமயங்களில் கடுமையான தண்டனையைக் கொண்டு வருகிறதாயிருந்தாலும், சந்தேகம் இல்லாமல் சில பாடுகளும், அழுகையும் தனிப்பட்ட பாவத்திற்காக அல்லாமல் பிற காரணங்களுக்காகவே ஏற்படுகின்றன.

## இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தம் என்ன?

(2) தேவனுடைய ஜனங்கள் பாடு அனுபவிப்பதோ அல்லது அழுவதோ ஒருபோதும் தேவனுடைய சித்தமல்ல என்ற தவறான கருத்து பல்வேறு வழிகளிலும் கிறிஸ்தவ விஞ்ஞானம், புதிய சிந்தனை, மதங்களின் மறைபொருள் அறிவு (ரோஸிகுருசியானிஸம் - Rosicrucianism) முதலிய பல்வேறான




பொய்யான தத்துவங்களாலும் ஆதரிக்கப்படுகிறது. இது, இந்த நவீன காலங்களில் "விசுவாசத்தால் குணமாக்குபவர்கள்" என்றழைக்கப்படுகிற அநேகர் மற்றும் "அந்நிய பாஷை பேசுதலை" ஆதரிக்கிறவர்களின் பொதுவான செய்தியாகவும் கூட இருக்கிறது. அவர்கள், தேவன் தம்முடைய ஜனங்கள் எவரும் பாடனுபவிக்கவோ அல்லது அழவோ அல்லது நோய்வாய்ப்பட்டிருக்கவோ வேண்டுமென்று விரும்பவில்லை என்று அநேகர் சிந்திக்கும்படி ஏமாற்றுகிறார்கள். ஒருவர் சரீரப்பிரகாரமான வேதனையாலோ அல்லது துயரங்களினாலோ துன்பப்படுவாரானால், அது எப்போதுமே தனிப்பட்ட பாவத்தின் காரணமாகவோ அல்லது விசுவாச குறைவினால் தான் இருக்கும் என்று அறிவிக்கிறார்கள். தேவனுடைய வசனம் என்ன சொல்கிறது? அது அவர்களின் இந்த அறிக்கையை மறுக்கிறது, ஏனெனில், இது தேவனுடைய சித்தம் என்றும், இந்த விசுவாசமுள்ள அவருடைய ஊழியக் காரர்கள் அவருக்காக பாடனுபவிப்பது அவர்களுடைய வளர்ச்சிக்காகவும், பெலனடைவதற்காகவும், தேவனு டைய மகிமைக்காகவுமே என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

"**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாய் இருக்கிறார்**" (சங். 37 : 23) என்று உங்கள் வேதம் சொல்கிறது. "**மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும். அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.**" (நீதி. 16 : 9). "**அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**" (ரோம. 8 : 28). "**அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் (நித்தியத்துடன் ஒப்பிடும்போது) மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**" (2 கொரி. 4 : 17).

இயேசுவும்கூட, தேவனுடைய சித்தத்தின் படியும், ஏற்பாட்டின்படியும் பாடுபட்டார்; "**அவர் குமாரனாயிருந்தும், பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்.**" (எபி. 5 : 8). பிதா அவருக்கு குடிக்கக் கொடுத்த பாத்திரத்தில் அவர் விசுவாசத்துடன் பானம் பண்ணினார். (யோவா. 18 : 11). அவர் பாடுகளைப் பொருட்படுத்தாமல் பிதாவின் சித்தத்தை செய்வதில் களிகூர்ந்தார். (யோவா. 4 : 34; 5 : 30; 6 : 38). நம்முடைய கர்த்தர் தம்மைப் பின்பற்றுபவர்களிடம், "**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு**" (யோவா. 16 : 33) என்று சொன்னார். ஆகவே, தேவனுடைய ஜனங்கள் பாடனுபவிப்பதும், அழுவதும், ஒருபோதும் அவருடைய சித்தமல்ல என்ற வஞ்சக உபதேசத்தைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக.


## கிறிஸ்தவ ஜீவியம் எளிதானதா?

(3) கிறிஸ்தவ ஜீவியம் ஒவ்வொரு வழியிலும் எளிதான ஒன்றாக இருக்கிறது என்ற தவறான கருத்து நிலவி வருகிறது. உண்மைதான் இயேசு, (மத். 11 : 28-30). "**வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்: என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்: என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது**" என்று சொன்னார். ஆனால் அநேகர் இந்த பாடத்தை தவறாகப் புரிந்து கொண்டு, அடிமைத்தனத்தின் நுகம் மற்றும் சுமை என்று எதுவுமே கிறிஸ்தவ ஜீவியத்தில் இருக்கக் கூடாது என்று எண்ணுகின்றனர். ஒரு கிறிஸ்தவனாக மாறுவது, சுகமான மலர்ப்படுக்கையின் மீது வைத்து பரலோகத் திற்குள் அழைத்துச் செல்லப்படுவதற்காகவே என்று அநேகர் இப்போது எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட கருத்து தவறாகும். அது சத்தியத்துக்கு தூரமாகவும், அனுப வத்திற்கு அப்பாலும் விலகியுமிருக்கிறது.

கிறிஸ்தவ ஜீவியம் அநேக ரோஜாக்களைக் கொண்டிருக்கிற அதே வேளையில் அது அநேக முட்களையும்கூட கொண்டிருக்கிறது. அரசியல், வர்த்தகம், மார்க்கபேதம், சமூகம், பாவம், சுயநலம் மற்றும் பெருமை ஆகிய நுகங்களுடன் ஒப்பிடும்போது நம்முடைய கர்த்தருடைய நுகம் மெதுவானதா யிருக்கிறது, அத்துடன் அவரிடத்தில் நாம் முழுமை யான பக்தியைக் காட்டுவதில் இது அன்பு பொதிந்த தாயிருக்கிறது. அன்பு "**சகலத்தையும் தாங்கும்**" (1 கொரி. 13 : 7), மேலும் அவருக்காக நாம் சுமக்கின்ற பாரங்களை, பாவம் மற்றும் மரணத்தின் சாபத்தின் கீழாக சுமக்கப்படும் மிகுதியான பாரங்களுடன் ஒப்பிடுகையில் இலகுவாயிருக்கின்றன; ஆனால் நாம் பிரதிஷ்டை செய்யும்போது அவருடைய நுகத்தை நம்மீது ஏற்றுக் கொண்டு, தேவன் நம்மீது வைக்கப் பிரியப்படும் பாரத்தை சுமக்கிறோம். நம்முடைய நுகத்தையும் உடன் சுமப்பவராகவும் நமது பாரத்தை தாங்குகிறவராகவும் அவர் நம்முடன் பங்கு கொள் கிறார், நம்முடைய பலவீனத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்குகிறது. (2 கொரி. 12 : 9, 10; பிலி. 4 : 13). கிறிஸ்தவ ஜீவியம் எளிதான ஒன்று என்று சொல்கிற தவறான கருத்தை மறுக்கிற இன்னுமொரு வேத வாக்கியம் லூக். 12 : 49-53 ஆகும்.

## பாடுகளும் அழுகையும் தேவனுடைய மகிமைக்காக

நம்முடைய துன்பங்கள், துயரங்கள் மற்றும் அழுகை ஆகியவற்றிலிருந்து அதிக நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது; அதுவும் நமக்காக மாத்திரமல்லாமல் கிறிஸ்துவின் ஆவியிலும், தேவனுடைய மகிமைக்காகவும் இவைகளை நாம் ஏற்றுக் கொள்கிறதை அறிந்து கொள்கிறவர் களுக்காகவும் கூட பெற்றுக் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. தேவனுடைய சில கிருபைகளை அப்படிப்பட்ட பிரதிகூலமான சந்தர்ப்பங்கள் நிகழாமல் நாம் வளர்த்துக் கொள்ள முடியாது. சில நேரங்களில் துன்பங்களை நமக்கு அனுமதித்து, வழிவிலகி தூரமாகப் போவதிலிருந்து நம்மை இழுத்து, கீழ்ப்படிதல் மற்றும் விலையேறப் பெற்ற ஐக்கியத்தில் நம்மை அவரண்டையில் சேர்த்துக் கொள்கிறார். உதாரணமாக, சங். 119 : 67, 71, 75 ஆகிய வசனங் களில், "**நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி**



> "....... என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?"
>
> எபிரெயர் 12 : 5–7

**நடந்தேன்: இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்:" "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது: அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன்:" "கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திர வப்படுத்தினீர் என்றும் அறிவேன்**" என்றும் வாசிக்கிறோம்.


சில நேரங்களில் தேவன் தம்முடைய ஜனங் களிடமிருந்து தம்முடைய பிரசன்னத்தையும், தயவை யும், கொஞ்சம் நேரம் விலக்கிக் கொள்வது அவசியம் என்று காண்கிறார். "**அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத்** (என் தயவை) **தேடுமட்டும்: நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப்போய் விடுவேன்: தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்.**" (ஓசி. 5 : 15) ஒரு உண்மையுள்ள பெற்றோர் தங்கள் குழந்தையை அதன் சொந்த நலனுக்காக சில நேரங்களில் கட்டாயமாக தண்டிக்கிறபோது, அது அந்த தண்டனையைப் பெற்றுக் கொள்ளும்போது அந்த குழந்தை வேதனைப்படுவதைவிட, அந்த சிட்சை அவசியமாயிருப்பதைக் காண்பதிலும், அதைக் கொடுப்பதிலும் அதின் பெற்றோர் அதிக வேதனைப் படுவார்கள். அதைப் போலவே, நம்முடைய அன்புள்ள பரலோகப் பிதா நம்முடைய எல்லா பாடுகளிலும், வருந்துகிறார். "**அவர்களுடைய எல்லா நெருக்கங் களிலும் அவர் நெருக்கப்பட்டார்**" ஆனால், அவை நமக்கும், பிறருக்கும், அவருக்கும் விளைவிக்கிற நன்மையை சந்தோஷத்துடன் நோக்கிப் பார்க்கிறார். எப்பேற்பட்ட அற்புதமான பரலோகப் பிதாவை நாம் பெற்றிருக்கிறோம்.!

தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு தம்முடைய விசேஷித்த பாதுகாப்பை நிச்சயப்படுத்து கிறார். (1 பேது. 5 : 7). "**நான் உன்னை விட்டு விலகு வதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை**" என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (எபி. 13 : 5). நாம் ஏசா. 49 : 15, 16-ல் "**ஸ்திரீயனவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்**" என்று வாசிக்கிறோம்.

எபி. 12 : 5-7-ல் "**என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக் கிறார். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்: தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?**" என்றும், வசனம் 8-ல், "**எல்லோருக்கும்** (தேவனுடைய உண்மையான பிள்ளைகள்) **கிடைக்கும் சிட்சை** (ஒழுக்கப் பயிற்சி, திருத்துதல்) **உங்களுக்கு கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிபிள்ளைகளாயிருப்பீர்களே**" என்று வாசிக்கிறோம். வசனம் 9-ல், "**அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா?**" என்று வாசிக்கிறோம்.

"**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ, புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள்.**" (1 பேது. 4 : 12, 13). ஆகையால், "**உபத் திரவம் பொறுமையையும்** (மகிழ்ச்சியுடன் பாடநுப வித்தல்), **பொறுமை பரீட்சையையும்** (Experience அனுபவத்தையும்–ஆங்கில வேதாகமம் பார்க்கவும்) (அங்கீகாரத்தையும்) **அனுபவம் நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங் களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். ஏனெனில், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.**" (ரோம. 5 : 3–5). நாம் முதலாவதாக பரீட்சிக்கப்பட்டு, உண்மையுள்ளவர் களென்று காணப்படுவது வரை நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. அவருக்கு மகிமையுண் டாக, நம்முடைய சோதனையின் கீழ் நாம் உண்மை யுள்ளவர்களென்று நிரூபிப்பது அவருடைய இருத யத்துக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருவதுடன், அவருடைய நாமத்துக்கு மகிமையையும் சேர்க்கிறது.

எல்லாம் நம்முடையது; ஏனெனில் நாம் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர், தேவன் கிறிஸ்துவை இந்த மகிமையான அனுபவங்




களுக்கு அழைத்திருக்கிறார். (1 கொரி. 3 : 21-23). யாரெல்லாம் ஆவிக்குரிய சந்தோஷங்களை உணர்ந்து பாராட்டாமலிருக்கிறார்களோ, அவர்கள் தற்போதைய பயிற்சியை பொறுமையுடனும், நன்றியுடனும் சகித்துக் கொள்ள முடியாதவர்களாகவே எதிர்பார்க்கப்படுகிறார்கள். தற்காலத்திய சோதனை காலத்தின் ஆச்சரியமான மாற்றத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்ளும் பொருட்டு இந்த உபத்திரவங்களைத் தொடர்ந்து, வரப்போகிற மகிமையைக் குறித்து கொஞ்சமாவது நாம் கண்டு கொள்ள வேண்டும். (1 பேது. 1 : 11).

நம்முடைய கர்த்தராகிய இயேசு, தம்முடைய விசேஷ பரீட்சை காலத்தின்போது, "**அசட்டை பண்ணப் பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்.**" (ஏசா. 53 : 3); இருந்தும் அவர் சிலுவையின் மரண பரியந்தம் தேவனுடைய சித்தத்தை செய்வதில் அவர் களிகூர்ந்தார். (சங். 40 : 8; யோவா. 4 : 34; 5 : 30; 6 : 38; பிலி. 2 : 8; எபி. 12 : 2). அதனால் அவர் தம்மைப் பின்பற்றி வருபவர்களிடம், அவர்கள் நீதியினிமித்தம் துன்பப்படும்போதும், வையப்பட்டு, அவர் நிமித்தமாக தவறாக குறித்துக்காட்டப்படும் போதும் பாக்கியவான்களாயிருக்கிறார்கள் என்று சொல்கிறார். மேலும் நீங்களும் அவ்வாறாக நடத்தப் படும்போது, "**நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்**" என்று அவர் சொல்லியிருக்கிறார். (யோவா. 16 : 20).

"**அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது**" தேவனுக்கு ஏற்றதாயும், பிரியமாயும் இருந்ததானால் (எபி. 2 : 10), நிச்சயமாகவே அவருடைய ஊழியத்தில் சேர்க்கப் பட்டுள்ள ஒவ்வொருவரும் "**இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி**"ப்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். (2 தீமோ. 2 : 3). "**கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்**" (சங். 11 : 5); அவர் "**இருதயங்களைச் சோதித்தறிகிறவர்**" (நீதி. 17 : 3; 1 தெச. 2 : 4).

நாம் 1 பேது. 5 : 10-ல், "**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு** (பரலோகத்தில்) **அழைத்தவராயிருக்கிற** (இயேசுவின் மணவாட்டியை) **சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவாராக**" என்று வாசிக்கிறோம். சிறுமந்தை வகுப்பார் பாடுகள் மூலமாக பூரணப் படுத்தப்பட்டார்கள், திரள் கூட்டமும் கூட இன்னல்களின் சூளையில் சோதிக்கப்பட்டார்கள்; தேவனுடைய ஜனங்களின் இந்த இரண்டு கூட்டத்தாரும் முறையே பொன் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களாக அடையாளப் படுத்தப்படுகின்றனர். (மல். 3 : 3; 2 தீமோ. 2 : 20). தேவனுடைய ஜனங்கள் எல்லாரும் அவர் நித்திய ஜீவனை அவர்களுக்கு வெகுமதியாக அளிப்பதற்கு முன்பாக கடுமையாக பரீட்சிக்கப்பட வேண்டும். உலக மனுக்குலத்தாரும்கூட விசேஷமாக ஆயிர வருட நியாயத்தீர்ப்பு நாளின் முடிவில் அவர்கள் இறுதியாக வெகுமதியளிக்கப்படுவதற்கு முன்பாக (பூமியின் மீதுள்ள பரதீசில்) பரீட்சிக்கப்படுவார்கள். (மத். 25 : 34-40).

நிச்சயமாகவே, இந்த 6143 வருட கால (ஆதாம் 4129 BC to 2014 AD) துயரத்தின் இரவின் போது பாடுகளும், கண்ணீரும் தேவனுடைய மகிமைக்கென்று அதிக நன்மையானதை நிறைவேற்றி யிருக்கிறது. இது அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட வர்களையும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களைப் போன்ற – குவாசி எலெக்ட் வகுப்பாரையும் வரவிருக்கிற

***அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.***

***1 கொரி. 13 : 4-7.***


கிறிஸ்துவின் மத்தியஸ்த ஆட்சியின்போது ஏற்ற காலத்தில் மனுக்குலத்தாரை ஆசீர்வதிப்பதற்காக தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிற மிகப்பெரிய வேலை மற்றும் கனத்திற்காக ஆயத்தப்படுத்தி யிருக்கிறது. உலக மனுக்குலத்தாரும்கூட அதிகமாக கற்றுக் கொண்டதுடன், பாவம் மற்றும் மரணத்தின் சாபத்தின் கீழாக தீமையுடனான தங்கள் அனுபவத் தால் மிகுதியான நன்மை அடைவார்கள். அவர்கள் தங்களுடைய மரண நித்திரையிலிருந்து விழித்தெழச் செய்யப்படும்போது தங்களுடைய உயிர்த்தெழுதலின் காலையில் சந்தோஷக் களிப்பு அவர்களுக்கு வந்து சேரும். யோவா. 5 : 28 "**இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்: ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்.**" ஆம், நித்திய ஜீவனுக்கான தங்கள் பரீட்சை மனுக்குலத்தாருக்கு கொடுக்கப்பட்ட பின்பு, அவர்கள் முன்பு கற்றுக் கொண்டவற்றை உணர்ந்து, அவற்றால் பயனடைய முடியும்; அப் பொழுது தேவனுடைய வாக்குத்தத்தம் நித்திய ஜீவ வாழ்வாயிருக்கும்! (சங். 90; E. 17, பக். 320-323).

> ***கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். சங். 30 : 4, 5.***

யேகோவாவின் வாக்குத்தத்தம் ஏசா. 55 : 11-ல், "**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்: அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**" வெளி. 21 : 4 "**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை: முந்தினவைகள் ஒழிந்து போயின.**" அத்துடன் நம்முடைய பாட வசனம் சங். 30 : 5 - லிருந்து "**சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.**"

# வார்த்தைகள் மீதான உண்மையான கருத்துக்கள்


***Sincere Thoughts on Words***




தேவன் நமக்காக பூரணமான ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அவர் அதை முழுவதுமாக ஒரு போதும் ஒரே நேரத்தில் நிறைவேற்றுகிறதில்லை. படிப்படியாகத்தான்நிறைவேற்றுவார், ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல் **விசுவாசித்து நடப்பதற்கு** கற்றுத் தர அவர் விரும்புகிறார்.

**பி**ரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை நாம் உணர்ந்து அறிவிக்கிறோம்! ஆயினும் அவர் களுடைய தேவைகள் சார்பாக அதிகமதிகமாக விஷயங் களை எழுதுவதற்கு வழிநடத்தப்படுகிற காரணத்தை நாம் காண்கிறோம். வேதாகம வரலாறு முழுவதிலும் யேகோவா, காலத்தைக் குறித்த போதனைகளை, அந்த காலத்தின் தேவைகளுக்கு நேராகவும், அந்த நாளின் மொழியிலும் வழிநடத்தி வந்திருக்கிறார். பிரதிஷ்டை செய்த எபிபனி பாளையக் காரர்கள் என்று நாங்கள் அழைக்கிற இந்த வகுப்பார், தேவன் இப்போது ஈடுபாடுகொள்கிற பிரதான வகுப்பாராக இருப்பதால் நம்முடைய எழுத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள உறுதியான வார்த்தைகளுக்கு நம்முடைய மனங்களை வழிநடத்திச் செல்வது, காலத்துக்கேற்றதாகவும், பிரயோஜனமானதாகவும் தோன்றுகிறது. நாங்கள் (எபிபனி வேத மாணவர்கள் என்ற வகையில்) எங்களுக்கே சொந்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தி அந்த வார்த்தைகள் மற்றும் சொற்கள் மூலம் சில வேதாகம கருத்துக்களை விவரித்து அவருடைய வார்த்தையை சிறப்பாக புரிந்து கொள்ள முயற்சிக்கிறோம்.

"Consecrated Epiphany Campers"- பிரதிஷ்டை செய்த எபிபனி பாளையக்காரர்கள் என்னும் பதம் வேத வாக்கியங்களில் காணப்படவில்லை, ஆயினும் அவற்றின் பெயரை உருவாக்குகிற மூன்று




**சத்தியத்தைப் பின்தொடர்தல்**

வார்த்தைகள் வேத வாக்கியங்களின் அடிப்படையில் உள்ளவை ஆகும். பிரதிஷ்டை = இருதயத்தின் நிலை. எபிபெனி = இருதயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட காலப் பகுதி; பாளையக்காரர்கள் = தேவனுடைய திட்டத்தில் தங்கியிருக்கக்கூடிய இடம். ஜாண்சன் போதகர் இந்த பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர் வகுப் பாரை (CEC வகுப்பாரை) "ஆபிரகாமுடைய வித்தின் ஐந்தாவது வரிசை" என்றும் "தெரிந்தெடுப்புக்குட்பட்ட ஐந்தாவது வகுப்பு" என்றும் கூறுகிறார். ஒரு CEC யிடம் காணப்பட வேண்டிய மிகவும் விரும்பத்தக்க நிலைமை பரோஷியா மற்றும் எபிபெனி சத்தியங்கள் இரண்டையுமே ஏற்றுக் கொள்வதே என்று நாங்கள் நம்புகிறோம். பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக் காரர் வகுப்பாராக தகுதியாவதற்கு, ஒருவன் இயேசு கிறிஸ்துவை தன்னுடைய இரட்சகராகவும், ராஜாவாக வும் ஏற்றுக் கொண்டு, அதன்பின் பிரதிஷ்டை செய்து, அந்த பிரதிஷ்டையை நிறைவேற்றவும் வேண்டும். விசுவாசப் பரீட்சை என்னவெனில், கிறிஸ்தவ குணத்தை வளரச் செய்வதாகும். முக்கியமாக கீழ்ப்படி தலுக்கு வழிநடத்தும் குணங்களான விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் வளர்ச்சி பெறுவதாகும். பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளைய வகுப்பினர், தெரிந்தெடுப்புக்குட்பட்ட மற்ற வகுப்பாரைப் போலவே மரணத்திற்கென்று பிரதிஷ்டை செய்கின்றனர். இந்த பொல்லாத உலகத்தின் தேவனாக சாத்தான் கிரியை செய்யும் பொழுது செய்யப்படுகிற எந்த பிரதிஷ்டையும் மரணபரியந்தமானது. இந்த மிகப்பெரிய பிரதிஷ்டை செய்கிற சிலாக்கியமானது இப்போது, CEC வகுப்பினருக்கு பிரகாசிப்பித்தலைக் கொடுப்பதுடன், இருதயத்தில் எழுச்சி மற்றும் ஊக்குவித்தலை அருளும் பரிசுத்த ஆவியினால் பெலனடைதலையும் கொடுக்கிறது. இது தேவனுடைய ஆழமான காரியங்களைப் பற்றிய புரிந்து கொள்ளுதலைக் கொண்டு வருகிறது.

நாங்கள் அடிக்கடி, "தற்காலிகமாக" மற்றும் "எதிர்பார்க்கப்படுகிற" போன்ற வார்த்தைகளை நமக்கு சார்ந்ததாக இருக்கிற பல்வேறான பொதுக்கருத்துக் களை விளக்குவதில் தகுதியாக பயன்படுத்துகிறோம். அதாவது, "தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதல்," மற்றும், இயேசு நமது "தற்காலிகமாக பரிந்து பேசுபவராக;" இருக்கிறார் "கிறிஸ்துவின் புண்ணி யத்தை தற்காலிகமாக சாட்டுதல் செய்வதையே" நாம் பெறுகிறோம், அத்துடன் தேவன் நம்முடைய "(எதிர் கால) எதிர்பார்த்திருக்கிற (வருங்கால வாழ்விற்குரிய) பிதாவாக" இருக்கிறார் போன்றவை. இந்த பதங் களைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறவர்களுடன் பேசுகையில் அவற்றைப் பயன்படுத்துவது சரியானதா யிருந்தாலும், அவைகளை நாம் தேவைக்கு மேல் அதிகமாக பயன்படுத்தக் கூடாது. "தற்காலிகமாக" என்ற வார்த்தையின் பிரச்சனை என்னவெனில், அதின் பிரபலமான சொற்பொருள் விளக்கமானது, "நிச்சயமற்றது, தயங்குவது" என்பதாகும். இந்த வார்த்தைகளை தொடர்ந்தேர்ச்சியாக நமது கட்டுரை களில் உபயோகிக்கும்போது, பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களையும் மற்ற குவாசி எலெக்ட் வகுப்பாரையும் தங்களுடைய பிரதிஷ்டை யானது தங்களுடைய தனிப்பட்ட இரட்சிப்புக்கு குறைவான அர்ப்பணிப்பையே அவசியப்படுத்துகிறது என்று எண்ணும்படியாக தூண்டுவதாகக் காணப் படலாம். நம்முடைய பிரதிஷ்டை எந்த வகையிலும் அரைகுறை மனதோடு இருக்கலாம் என்ற ஒரு எண்ணத்தைக் கொடுக்க நாங்கள் நிச்சயமாகவே விரும்பவில்லை.

சுருக்கமாக சொன்னால், "விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டிருத்தல், இயேசு நமக்காக பரிந்து பேசுகிறவராக இருக்கிறார், கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுதலைப் பெற்றுக் கொள்கிறோம், தேவன் நம்முடைய பிதாவாக இருக்கிறார்," என்று பேசுவது சில சமயங்களில் பொருத்தமானதாக இருக்கும். எனவே, தற்காலிகமாக, எதிர்பார்க்கிறபடியான மற்றும் இது போன்ற பிற வார்த்தைகளை விட்டுவிடலாம். அப்படிச் செய்வதில், வேத வாக்கியங்கள் போதிக்கிற தற்காலிக மாக நீதிமானாக்கப்படுவதையும், அது குறித்துக் காட்டுகிற எல்லாவற்றையும் நாங்கள் நிச்சயமாக மறுக்கவில்லை. ஆனால் நாம் நம்முடைய மனதில் சரியான கருத்தைக் காத்துக் கொள்வதற்காகவும், அதே சமயத்தில் நம்முடைய மொழி நடையில் அதிக தடைவரம்பில்லாதிருக்கவும் தெளிந்த புத்தியின் ஆவியை நாம் பயன்படுத்துவோமாக. ***

# எங்கள் பத்திரிக்கை சம்பந்தமான கொள்கைகள்

***Our Editorial Policies***




நாம் எதிர்பார்த்தது போலவே, கடைசியான, ஆயிர வருட யுகத்துக்கு முந்திய ஆபிரகாமின் வித்தாகிய சகோதரர்களுக்கு ஏற்ற சத்தியத்தைக் கொண்டுவரும் ஊழியத்துக்குத் தகுதியுள்ளவர்களாகச் சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்படுவதற்கு, அடுத்த பூமிக்குரிய வகுப்பாருக்குள் (பிரதிஷ்டை செய்த எபிபனி பாளையக் காரர்களுக்குள்) கர்த்தர் நிலைமாற்றத்தின் காலத்தை முன்னுக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறார் என்று நாங்கள் அறிகிறோம். நீதி. 4 : 18-க்கு இசைவாக, இந்த முக்கியமான வகுப்பினருக்கு, எப்பொழுதும் போலவே, ஏற்ற கால சத்தியம் அவசியமாயிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

நிகழ்கால சத்தியத்துக்காக, யேகோவா தேவனுடைய விசேஷித்த வாயாக ஊழியஞ்செய்தவர்களின் எழுத்துக்களை வேத வசனங்களுக்கு இசைவாக நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, கர்த்தர் நமக்கு முன்பாக புத்தம்புதியதான ஆவிக்குரிய ஆகாரம் நிறைந்த (மேஜையை) பந்தியை வைத்திருப்பதையும், அந்த சத்திய (மேஜையிலிருந்து) பந்தியிலிருந்து புசிப்பவர்களாகிய நமக்கு அது புத்துணர்ச்சி தருகிறதாக இருப்பதையும் அறிகிறோம். “**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியு மாயிருந்தது. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.**” (எரே. 15 : 16).

சுதந்தரமானதும், சபைப் பிரிவுகளைச் சாராததும், மதம் சம்பந்தமான பத்திரிக்கையாயும், எல்லா சபைப் பிரிவுகளிலி ருந்தும் விடுவிக்கப்பட்டிருப்பதால், தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொண்டதற்கேற்ப அவருக்கு மாத்திரம் கட்டுப்பட்டிருக்கிறது. பைபிள் ஸ்டாண்டார்ட், மற்றும் நிகழ்கால சத்தியம் என்கிற இரண்டு பத்திரிக்கைகளுமே சுதந்தரமானதும், சபைப்பிரிவுகளைச் சாராததும், மத சம்பந்தமான பத்திரிக்கையாயும், எல்லா சபைப் பிரிவுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொண்டதற்கேற்ப அவருக்கு மாத்திரம் கட்டுப்பட்டதுமாகும். தாங்கள் நீதிமானாக்கப்படுவதற்கு மிகவும் சிறப்பான காரணமான இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தில் விசுவாசத்தை அறிக்கை செய்கிறவர்களையும் பிரதிஷ்டையை அறிக்கை செய்கிறவர்களையும் ஜீவியத்தில் பொருத்தமான, சரியான நடத்தையின் மூலம் இவைகள் உண்மையானவைகள் என்று நிரூபிப்பவர்கள் அனைவரையும் சகோதர ஐக்கியத்துக்குள் வரும்படி அவைகள் அழைக்கக்கின்றன. ஈடுபலி உபதேசத்தை மறுதலிப்பவர்கள் மற்றும் அதுபோல, தங்கள் ஜீவியத்தின் மூலம் கர்த்தரை மறுதலிப்பவர்கள் எவர்களோ அவர்களிடமிருந்து இது எல்லாவிதமான ஐக்கியத்தையும் நிறுத்திக்கொள்கிறது. ஒருவரிடமும் எந்த தீய எண்ணமும் வெறுப்பும் கொள்ளாமல், எல்லாரிடத்திலும் அன்பு கொண்டவர்களாய், இந்த நிலைப்பாட்டை சரியான, ஏற்ற ஒன்றாக எடுக்க வேண்டும். இது, தேவனுடைய எல்லா பிள்ளைகளையும் கிறிஸ்தவ ஐக்கியத்துக்குள்ளாக இதே நிலையை எடுக்கும்படி அழைக்கிறது! இந்த வேண்டுகோளைக் கொடுப்பதன் மூலம், நாங்கள் அவர்களை எந்த கட்சியிலும், எந்த சபைப்பிரிவிலும் அல்லது ஸ்தாபனத்திலும் சேரும்படி அழைக்கவில்லை.

தேவனுடைய ஆள்தத்துவம், குணசுபாவம், சபை மற்றும் உலகத்தார் சம்பந்தமாக அவருடைய திட்டம் மற்றும் கிரியைகள் ஆகியவற்றை நிறைவாகவும் முற்றிலும் போதுமான தாகவும், பூரணமாகவும் தவறாமையோடு வெளிப்படுத்துகிற வேதாகமத்தை இந்த இரண்டு பத்திரிக்கைகளும் (BS & PT) தங்களுடைய திட்ட அளவாக (தரமாக வைத்திருக்கின்றன. பொருத்தமான வேத உபதேசங்களை, முக்கியமாக, நம்முடைய காலங்களுக்குப் பொருந்துகிறவற்றை பிடிவாதமாக கட்டாயப்படுத்தும் விதமாக, அல்ல, ஆனால் ஆலோசனையாக நமக்கு முன் வைக்க நாடுகிறது. வேத வாக்கியங்களுக்கான தங்களுடைய விளக்கங்களை பின்வருகிற வேதாகமப் பொருள் விளக்கங்களுக்கான ஏழு அடிப்படை அளவை விதிகளுக்கு உட்பட்டிருக்கும்படிச் செய்ய நாடுகிறது. ஒவ்வொரு வேத வாக்கியமும் அல்லது உபதேசமும்: (1) தன்னில் தானே இசைவுள்ளதாயும் (2) மற்ற எல்லா வேத வாக்கியங்களுடனும் (3) மற்ற எல்லா வேதாகம கோட்பாடுகளுடனும் (4) தேவனுடைய குணாம்சத்துடனும் (5) மீட்கும் பொருள் மற்றும் பாவ நிவாரண பலிகளின் தாற்பரியத்துடனும் (6) தேவனுடைய திட்டத்தின் நோக்கங் களுடனும் (7) உண்மை நிகழ்வுகளுடனும் நிச்சயம் இசைவிணக்கமாக இருக்க வேண்டும். இந்த ஏழு அடிப்படை அளவை விதிகளுக்கும் உடன்படாத ஒவ்வொன்றும் ஏற்கத் தகாததென விலக்கப்பட வேண்டும். “தற்பொழுது, பொதுவாக மறுதலிக்கப்பட்டு வருகிற, கிறிஸ்தவனின் நம்பிக்கைக்கு ஒரே உண்மையான அஸ்திபாரமாயிருக்கிற – “**எல்லாரையும் மீட்கும் பொரு ளாகத்** (ஒரு சரிநிகரான விலையாக, பதிலாளாக) **தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின்**” விலையேறப் பெற்ற இரத்தத்தினாலாகிய மீட்பைப் பாதுகாப்பதற்காக இந்த இரண்டு பத்திரிக்கைகளும் உறுதியாக நிற்கின்றன.

இவைகள் எல்லாவிதமான கட்சி சார்பான அமைப்பு கள், சபைப் பிரிவுகள், மற்றும் மனிதருடைய கோட்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டவையாக, தங்களுடைய ஒவ்வொரு சொல்லும் வேத வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சித்தத்துக்கு முழுவதுமாக கீழ்ப்படுத்திக் கொண்டு வர அதிகமதிகமாக நாடுகின்றன. புரிந்து கொள்ளும்படியாக தேவன் எங்களுக்குத் தந்திருக்கிற தெய்வீக ஞானத்தின்படி, கர்த்தர் என்ன கூறியிருக் கிறாரோ அதையெல்லாம் தைரியமாக அறிவிக்க இந்த இரண்டு பத்திரிக்கைகளும் சுயாதீனமுள்ளதாயிருக்கின்றன. இவைகளின் மனப் போக்கு அடம்பிடிப்பது அல்ல, மாறாக, நிச்சயமானது ஆகும். ஏனெனில், தேவனுடைய நிச்சயமான வாக்குத்தத்தங்கள் மீது பூரண விசுவாசத்துடன் கூடிய நடத்தை வேண்டும் என்று நாங்கள் உறுதியாக

### வேதாகமத்தின் 7 அடிப்படை தரங்கள்

ஒவ்வொரு வேத வாக்கியமும் அல்லது உபதேசமும் :

(1) தன்னில் தானே இசைவுள்ளதாயும்

(2) மற்ற எல்லா வேத வாக்கியங்களுடனும்

(3) மற்ற எல்லா வேதாகம கோட்பாடுகளுடனும்

(4) தேவனுடைய குணாம்சத்துடனும்

(5) மீட்கும் பொருள் மற்றும் பாவ நிவாரண பலிகளின் தாற்பரியத்துடனும்

(6) தேவனுடைய திட்டத்தின் நோக்கங்களுடனும்

(7) உண்மை நிகழ்வுகளுடனும்

நிச்சயம் இசைவிணக்கமாக இருக்க வேண்டும். இந்த ஏழு அடிப்படை அளவை விதிகளுக்கும் உடன்படாத ஒவ்வொன்றும் ஏற்கத் தகாததென விலக்கப்பட வேண்டும்.

அறிந்திருக்கிறோம். அவருடைய ஊழியத்திற்கு மாத்திரம் பயன் படுத்தப்படுவதற்காக இது ஒரு அமைப்பாக நிறுவப்பட்டிருக்கிறது. அதின் பத்திகளில் (coloumn) காணப்படுகிற அல்லது காணப்படாதது தொடர்பான எங்களுடைய முடிவுகள் தேவனுடைய ஜனங்கள் கிருபையிலும், ஞானத்திலும் கட்டி எழுப்பப்படுவதற்காக அவருடைய சித்தம், அவருடைய வார்த்தையின் போதனைகள் பற்றிய எங்கள் நிதானிப்பின்படி இருக்கும். அவைகள் தெரிவிப்பவைகள் அனைத் தையும் தவறாத நிச்சயமுடைய வேத வசனத்தால் நிரூபிக்க எங்களுடைய வாசகர்களை அழைப்பது மாத்திரமல்ல, அதோடுகூட வலியுறுத்துகிறோம். இதற்கான குறிப்புகள் அப்படிப்பட்ட பரீட்சித்துப் பார்த்தலை எளிதாக்குவதற்கு எப்பொழுதும் கொடுக்கப்படுகிறது.

இந்த இரண்டு பத்திரிக்கைகளும் (BS & PT) வேதாகமத்தின் அடிப்படையிலான, மத சம்பந்தமான பத்திரிக் கைகளாயிருப்பதால், வேதாகம நோக்கு நிலையிலிருந்து கையாள முடியாத ஒவ்வொன் றையும் தங்கள் பத்திகளிலிருந்து தவிர்த்துவிடும். வேதாகம கோட்பாடுகள் (உபதேசங்கள்) கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், புத்திமதிகள், தீர்க்கதரிசனங்கள், சரித்திரங்கள், அடையாளங்கள் ஆகியவற்றின் முழு நோக்கங்களையும் முடிந்த அளவுக்கு காலத்திற்கேற்ப புரிந்து கொள்வதற்கும் ஏற்ப கொடுக்கப்பட அவைகள் விரும்புகிறது. காலங்களின் அடையாளங்கள் பற்றிய சுருக்கமான விவரங்களையும் இவற்றை வாசிக்கிறவர்கள் பத்திரிக்கை ஆசிரியருக்கு எழுதி அனுப்பும் வேத வினாக்களுக்கான பதில்களையும் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம். பொதுவாகப் பயனுள்ள ஆர்வமான கடிதங் களும், அறிவிப்புகளும்கூட பிரசுரிக்கப்படுகிறது. இந்த பத்திரிக் கைகளின் பெயர்களுக்கு இசைவாக, தற்போதைய போராட்டங்கள் மற்றும் சோதனைகளை அடையாளங்களாகவும், அதேபோல ஊழியத்தின் சிலாக்கியங்கள், கர்த்தருடைய உண்மையான ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட எதிர்கால வெகுமதி களையும், வெற்றிகளையும்கூட குறிப்பிட்டுக்காட்ட நாங்கள் நாடுகிறோம். அது ஏனெனில், பிரதிஷ்டை செய்திருக்கிற கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய தற்போதைய அனுபவங்கள் மற்றும் எதிர்கால நம்பிக்கைகள் குறித்த விஷயங்களில் உதவியா யிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எங்களுடைய பத்திரிக்கைகள் யேகோவா தேவனுக்கு மட்டுமே கடமைப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, அவைகளில் பிரசுரிக்கப்படுகிற ஒவ்வொன்றும் நிச்சயமாக எங்களைக் குறித்த அவருடைய சித்தமாக இருக்கிறது என்று எங்களால் புரிந்து கொள்ளப்படுகிறது. வேத வாக்கியங்கள் நிச்சயமாக போதிக்கிறது போல (1 கொரி. 11 : 3) எந்த ஒரு உண்மையான கிறிஸ்தவனும் கர்த்தரைத் தவிர வேறு எந்த தலைக்கோ அல்லது தலைவர்களுக்கோ பற்றுறுதி (மெய்விசுவாசம்) கொண்டிருக்கக் கூடாது என்று கடந்த கால அனுபவங்கள் நிரூபிக்கின்றன. ஆகவே, இந்தப் பத்திரிக்கைகள் தங்களுடைய ஊழியத்தில் எந்த ஸ்தாபனங்களையும் சார்ந்திராமல், எல்லாவிதமான சபைப்பிரிவுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டதாக நிற்கிறது. இவைகள் சுவிசேஷத்துடனும், தேவனுடைய ஜனங்க ளுடனும், சபை ஸ்தாபனங்களின் வேலிகளைப் பொருட்படுத்தாமலும், நாம் ஈடுபாடு கொள்ள வேண்டிய மற்றவர்களிடமும் தொடர்புடையதாக, கர்த்தருடைய நலன்களுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட அடிமையாக இருக்கிறது. நாங்கள் யேகோவா தேவனுடைய கிருபையால் வேதாகமம் என்னும் தேவனுடைய வார்த்தையை தெளிவான புரிந்து கொள்ளுதலுடன் எங்களால் முடிந்த அளவுக்கு சிறப்பாகவும், எத்தனை பேருக்கு முடியுமோ அத்தனை பேருக்கும், எங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறந்த வழிகளிலும், தேவைப்படும் போதெல்லாம் கொடுக்கிறோம் என்று நம்புகிறோம். நாங்கள் கொடுக்கும் மிகச் சிறந்தவைகள் பூரணமானவை என்று சொல்ல முடியாது. ஆனால், இந்த அபூரணமானவைகள் நம்முடைய பரலோகப் பிதாவின் பார்வையில், அவருடைய நேச குமாரனுடைய புண்ணியத்தின் மூலமாக மூடப்படுகிறது என்று நாங்கள் நிச்சயமுள்ளவர்களா யிருக்கிறோம். தேவனுடைய ஜனங்களாலும் அவ்வாறே கருதப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் கொடுக்கும் வேத வசனங் களின் விளக்கங்களை மிகவும் கவனமாகவும் உண்மையுடனும் படித்து உங்கள் ஜெபங்களில் ஆதரிக்க வேண்டும் என்று மாத்திரம் கேட்டுக் கொள்கிறோம். அவர்களுக்கு நாங்கள் மகிழ்ச்சியுடன் அளிக்கும் நம்பிக்கை மிகச் சிறந்த அன்பின் ஒப்பந்தங்களோடு அவர்களுக்குக் கொடுக்கும் ஐக்கியமே. "**ஆதலால், கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர் களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.**" (பிலி. 2 : 1, 2). ***

Visit us at : **www.biblestandardindia.com**


*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

Bro. V. Vincent Jeyakumar

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**